பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: கார்த்திகை 21 (6—12—68) வெள்ளி ★ வெளியூர்: கார்த்திகை 22 (7—12—68) சனி [இதழ்: 143

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதி

நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர்கள் காணிக்கை

புதுடில்லி, டிச. 6—

'அறிஞர் அண்ணா சிகிச்சை நிதி' பற்றிக் கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோளுக்கிணங்க நாடாளுமன்ற மக்களவை -- மாநிலங்களவை தி.மு. கழக உறுப்பினர்கள் தங்களுடைய ஒரு மாத ஊதியத்தை உடனடியாக அனுப்பி வைப்பதென முடிவு செய்துள்ளனர்.

வானொலி மூலம் இந்தித் திணிப்பு

'தமிழ்நாடு' பெயர் சூட்டும் மசோதா

நாடாளுமன்ற மேலவையிலும் ஒருமுகமாக நிறைவேற்றம்

'தமிழ்நாடு வாழ்க' என முழங்கினார் தில்லை வில்லாளன்

புதுடில்லி, டிச. 6—

'தமிழ்நாடு' பெயர் சூட்டும் மசோதா, நாடாளுமன்ற மேலவையில் (மாநிலங்களவை) ஒருமனதாக நிறைவேறியது. மக்களவையிலும் இம்மசோதா ஒருமனதாக நிறைவேறியது தெரிந்ததே. இனி, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக இது அனுப்பிவைக்கப்படும்.

அவையின் எல்லாப் பிரிவினரும் இம்மசோதாவை ஆதரித்தனர்; ஒரிசா, நாகாலாந்து, நேபா பகுதிகள், மற்றும் பல நகர்கள் -- வீதிகள் ஆகியவற்றின் பெயர்களையும் மாற்றுமாறு யோசனை தெரிவித்தனர்.

விவாதத்தின்போது கழக உறுப்பினர் தில்லை வில்லாளன் பேசுகையில், பழங்காலத்திலிருந்தே 'தமிழ்நாடு' என்ற சொல் வழங்கிவந்ததற்கு ஆதாரமாகச் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களிலிருந்து சில பகுதிகளைப் பாடிக் காட்டினார்.

மேலும் அவர் பேசுகையில் விளக்கியதாவது:—

"இம்மசோதா, கோடிக்கணக்கான தமிழ் மக்களுக்கு திருப்தி அளிக்கும்; அவர்களுடைய நீண்டகால விருப்பத்தை நிறைவு செய்வதாகும்."

தம்முடைய பேச்சை அவர் முடிக்கும்போது, 'தமிழ்நாடு வாழ்க' என்று முழங்கினார்.

"இந்தப் பெயர் மாற்றத்தைத் தமிழ்ப் புத்தாண்டு நாளன்று செயல்படுத்தலாம்"

என்று காங்கிரசு உறுப்பினர் டி. செங்கல்வராயன் யோசனை தெரிவித்தார்; 'இந்த யோசனையைத் தமிழக அரசினருக்கு அனுப்பி வைக்கிறேன்' என்று உள்துறைத் துணையமைச்சர் சுக்லா கூறினார்.

"சனநாயக ஆட்சியில், மக்கள் உணர்ச்சிகளை அலட்சியப் படுத்த முடியாது"

என்று சுதந்தராக் கட்சி உறுப்பினர் எம். இரத்தினசாமி கூறினார்.

மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த ச. சோ. கட்சி உறுப்பினர் கௌரி முரகரி தமிழில் பேசுகையில், 'நாகாலாந்து, நேபா, ஆகியவற்றின் பெயர்களும் மாற்றப்பட வேண்டும்' என்றார்.

"தமிழின் வளம் செறிந்த மரபை அறியாதவர்களுக்கு அதை எடுத்துரைப்பதற்காகத் தமிழக அரசு, தமிழ் இலக்கியம் பற்றிக் கருத்தரங்கு ஒன்று நடத்த வேண்டும்"

என்று சுயேச்சை உறுப்பினர் ஏ. டி. மணி கேட்டுக்கொண்டார்.

அண்ணா சிலையை அகற்ற வேண்டுமாம்!

காங்கிரசுக்காரரின் போக்கு!

திருச்சிராப்பள்ளி, டிச. 6—

திருச்சி சிந்தாமணி கடைத் தெருவில் அண்மையில் அமைக்கப்பட்டுள்ள அறிஞர் அண்ணா அவர்களின் சிலையை அகற்றக் கோரி திருச்சி காங்கிரசு நகராட்சி உறுப்பினரான காத்தபெருமாள் என்பவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

மனுவில் அவர், திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் அன்பில் தர்மலிங்கத்தையும், திருச்சி நகராட்சி ஆணையாளரையும் பிரதிவாதிகளாகக் குறித்துள்ளார்.

நகராட்சியின் அனுமதியில்லாமல் அறிஞர் அண்ணா அவர்களின் சிலை நிறுவப்பட்டுள்ளதாகவும், அதைத் தடுக்காமலிருந்தது நகராட்சி ஆணையாளரின் தவறு என்றும் அவர் தம் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

திருச்சி சிந்தாமணி கடைத் தெருவில் அறிஞர் அண்ணா அவர்களின் உருவச் சிலை, அண்மையில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் அமைச்சர் கருணாநிதி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

'இந்து' இதழ் தகராறு

தனி டிரிபியூனல் முடிவுக்கு விடப்பட்டிருக்கிறது

சென்னை, டிச. 6—

'இந்து' இதழின் தொழிலாளர் தகராறு, தனி டிரிபியூனலின் முடிவுக்கு விடப்பட்டிருக்கிறது.

செஷன்சு நீதிமன்ற நீதிபதி பி. எஸ். சோமசுந்தரம், டிரிபியூனலாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்திச் சொற்களை நீக்க முடியாதாம்!

என். சி. சி. பற்றி டில்லியின் பதில்

புதுடில்லி, டிச. 6—

"தேசிய மாணவர் படைக்கான (என்.சி.சி.) இந்தி ஆணைச் சொற்களை ஆங்கிலச் சொற்களாக மாற்ற வேண்டும் என்ற தமிழக அரசின் யோசனையை இந்திய அரசு ஏற்றுக்கொள்ள இயலாது; இந்த ஆணைச் சொற்கள் பாதுகாப்புப் படைகளுக்கும் என்.சி.சி.-க்கும் பொதுவாக இருப்பதே காரணமாகும்" என்று பாதுகாப்புத் துறைத் துணையமைச்சர் எம்.ஆர். கிருஷ்ணா மாநிலங்களவையில் கூறினார்.

"தமிழகத்தில் இரு மொழித் திட்டம் -- அதாவது ஆங்கிலம், தமிழ் இரண்டு மட்டுமே இருக்கும் என்ற உறுதியான முடிவை தமிழக அரசு மேற்கொண்டிருக்கின்றது. என்.சி.சி.-யில் ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துவதற்கு மத்திய அரசு ஏன் தயங்க வேண்டும்?" என்று கழக உறுப்பினர் தில்லைவில்லாளன் கேட்டார்.

"என்.சி.சி.-க்கு என்ன பயிற்சி அளிக்கப்பட்டாலும், அது பாதுகாப்புப் படைகளின் எதிர்காலத்தை எவ்வகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்பதே மத்திய அரசுக்குள்ள அக்கறையாகும்; அதனால்தான், நாட்டின் மற்ற பகுதிகளுக்கு இசைவாகத் தமிழக அரசும் நடந்துகொள்ள வேண்டும் என விரும்புகிறோம்" என அமைச்சர் கூறினார்.

"நாடாளுமன்றம் நிறைவேற்றிய ஆட்சி மொழித் தீர்மானத்தில் சில, இந்தி பேசாத பகுதிகள்மீது விழுந்துள்ள சமமற்ற சுமையை அகற்ற அரசு என்ன செய்துள்ளது?" என்று சிட்டபாசு கேட்டார்.

"நாடு முழுவதும் புரிந்து கொள்ள ஒரு மொழி (கட்டளைச் சொற்களுக்கு) இருக்கவேண்டும் என்று அரசு விரும்புகிறது; இந்தி ஆணைச் சொற்களைப் புரிந்து கொள்வது எந்த மாநிலத்துக்கும் சிரமமாயிருப்பதாக நான் கருதவில்லை" என்றார் அமைச்சர்.

என்.சி.சி.-யை நிறுத்திவைப்பது சம்பந்தமாகத் தமிழகச் சட்டமன்றம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தைக் குறிப்பிட்ட அமைச்சர், 'தான் அளிக்கும் பண உதவியை மட்டுமே மாநிலச் சட்டமன்றம் கட்டுப்படுத்த முடியும்; ஆனால், என்.சி.சி. செயல்பட முடியாது என்று எந்த மாநில அரசும் கூற முடியாது' என்றார்.

அதிகாரிகள் வியப்பு

"கல்வி, மாநில அரசைப் பொறுத்ததாக இருப்பதால், 'என்.சி.சி.-ங்கு எந்த மாநில அரசும் நிறுத்த முடியாது' என்ற நிலையை மத்திய அரசு எவ்வாறு மேற்கொள்ள முடியும்" என்று தமிழக அதிகாரிகள் வியக்கின்றனர்!

தென்னகத் தலைவர்கள் கடும் எதிர்ப்பு

டில்லியின் கொல்லைப்புற முயற்சி -- இரா. செழியன் எச்சரிக்கை

புதுடில்லி, டிச. 5—

அனைத்திந்திய வானொலியில் இந்திச் செய்தி அறிக்கைக்கு முதலிடம் கொடுக்கப்பட்டு, அது எல்லா நிலையங்களிலும் ஒலிபரப்ப அஞ்சல் செய்யப்படும் என்ற மத்திய அரசின் முடிவுக்கு, இந்தி பேசாத பகுதிகளைச் சேர்ந்த தலைவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதுவரை ஆங்கிலச் செய்தி அறிக்கைதான் முதலில் ஒலிபரப்பாகி வந்தது; இனி இந்திச் செய்தி அறிக்கைக்குப் பின்னரே ஆங்கிலச் செய்தி அறிக்கை ஒலிபரப்பாகுமாம். இந்தப் புதிய ஏற்பாடு டிசம்மர் 8-ஆம் நாள் முதல் தொடங்குமாம்.

"அனைத்திந்திய வானொலியின் எல்லா நிலையங்களுக்கும் இந்த இந்திச் செய்தி அறிக்கை அஞ்சல் செய்யப்படுவதானது இந்தி பேசாத பகுதியில் கட்டாயமாக இந்தியைத் திணிப்பதாகும்" என்று நாடாளுமன்ற தி. மு. க. உறுப்பினர் இரா. செழியன் கண்டனம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"இந்த ஏற்பாடு இந்தி பேசாத பகுதிமக்களுக்குப் பெரிய தலைவலியைக் கொடுக்கும்; அதாவது, ஒன்று இந்திச் செய்தியறிக்கையைச் சகிப்புடன் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும்; இல்லையேல், வானொலியையே நிறுத்திவிட்டு இந்தி அறிக்கை முடியும்வரை வீணே உட்கார்ந்திருக்கவேண்டும்; இதைத் தவிர வேறு மாற்று வசதி ஏதும் இல்லை! வானொலி கேட்கும் அருமையான நேரத்தை வீணாக்கும் செயலேயாகும் இது! இதன் மூலம், அரசு, இந்தியைக் கொல்லைப்புறமாகத் திணிக்க முயலுகிறது!

வானொலியில் பயன்படுத்தப்படும் இந்தி சொற்களை, இந்தி தெரிந்தவர்களே புரிந்து கொள்ள முடியவில்லை என்று ஏற்கனவே கூறப்பட்டு வருகிறது. இந்நிலையில், இந்தியே தெரியாத பகுதியில் உள்ளவர்கள் கதி என்ன என்பதைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை."

காங்கிரசுக்காரரும் எதிர்க்கிறார்!

நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக உள்ள தமிழகக் காங்கிரசுக்காரரான திரு. ஆர். டி. பார்த்தசாரதி கூறியதாவது:—

"இப்படி, இந்திச் செய்தி அறிக்கையை எல்லா வானொலி நிலையங்கட்கும் கட்டாயமாக அஞ்சல் செய்வது தேவையற்ற வீண் வேலையேயாகும்!

"இந்தி பேசாத பகுதி மக்கள் இந்தியை அறிந்துகொள்ளும் காலம்வரை, இப்படி இந்திச் செய்தியைக் கட்டாயமாக ஒலிபரப்புவது பயனற்ற செயலேயாகும்; மேலும் இது, இந்தி பேசாத மக்களின் ஆத்திரத்தைத் தூண்டும் செயலுமாகும்."

அரசு ஊழியர்களின் கோரிக்கைகள்

அனுதாபத்துடன் கேட்டறிந்தார் அண்ணா

கோரிக்கை நாள் தள்ளிவைக்கப்பட்டதாக அறிவிப்பு

சென்னை, டிச. 5—

தமிழக அரசின் அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்களின் கோரிக்கைகள் பற்றி முதலமைச்சர் அண்ணா அவர்களை, தமிழ்நாடு அரசிதழ் பதிவுறா ஊழியர் ஒன்றிப்பின் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசினர்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள், அவர்களது கோரிக்கைகளை அனுதாபத்துடன் கேட்டறிந்தார்.

இச்சந்திப்பின் விளைவாக அரசு ஊழியர்கள் இத்திங்கள் 16-ம் நாளன்று தமிழகம் முழுதும் நடத்தவிருந்த 'கோரிக்கை நாள்' தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

ஊழியர்களின் கோரிக்கைகளான -- ஊதியக் குழு அமைத்தல், இரகசியக் குறிப்பேட்டை ஒழித்தல், பஞ்சப் படி உயர்வு, திருமணக் கடன் அளித்தல், மருத்துவப் படி அளித்தல் ஆகியவை பற்றி முதலமைச்சர் அண்ணா

(4-ம் பக்கம் பார்க்க)

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. பி.எல்.

திருவள்ளுவராண்டு 1999 கார்த்திகை 21 (6-12-68) வெள்ளி

பாண்டிச்சேரி தேர்தல்

[1]

பாண்டிச்சேரி--காரைக்கால் பிரதேசத்தைச் சேர்ந்த நகராட்சி மன்றங்களின் தேர்தல், இத்திங்கள் பதினாறும் நாள் நடைபெற விருக்கிறது. இத்தேர்தலில், 'நகர நலக் கூட்டு முன்னணி' என்ற பெயரால், முன்னேற்றக் கழகம்--பொதுவுடைமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கலந்துகொள்ளுகின்றனர். இம்முன்னணியில் முஸ்லீம் லீகும், உழைப்பாளர் கட்சியும் இடம்பெற்றுள்ளன.

இத்தேர்தலில் காங்கிரசுக் கட்சியும் பங்கு கொண்டிருக்கிறது. இக்கட்சியை எதிர்த்துத்தான் நகர நலக் கூட்டு முன்னணி, தேர்தலில் போட்டியிடுகிறது.

இதுவரையில் நடைபெற்ற நகராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில், 'அமைப்பு' என்ற முறையில் கழகத்தைச் சேர்ந்தவர்களில் எவரும் கலந்துகொண்டதில்லை; தனிப்பட்ட முறையில் இரண்டொரு கழகத்தினர் தேர்தலில் போட்டியிட்டதுண்டு.

இந்தத் தேர்தலில்தான், முன்னேற்றக் கழகம், 'அமைப்பு' என்ற நிலையில் நின்று, முதன் முறையாகப் போட்டியிட முன்வந்திருக்கிறது. முன்னேற்றக் கழகம் குறிப்பிடத்தக்க அளவுக்கு, புதுவை -- காரைக்கால் மக்களின் ஆதரவையும் அன்பையும் பெற்று வளர்ந்துவருகிறது என்பதற்கு, இத்தேர்தலில் கலந்து கொண்டிருப்பதே போதிய சான்றாகும்.

பாண்டி -- காரைக்கால் நகராட்சி மன்றங்களின் தேர்தல், 1967-ம் ஆண்டிலேயே நடைபெற்று முடிந்திருக்க வேண்டும்; ஆனால், பாண்டி மாநில ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த காங்கிரசுக் கட்சிக்குள்ளாக இடையறாது தொடர்ந்து நடைபெற்றுவந்த 'கோட்டைக்குள் குத்து வெட்டு', நகராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறுவதற்குத் தடையாக இருந்துவந்தது.

காங்கிரசு ஆட்சியினர், நடைபெற வேண்டிய நகராட்சி மன்றங்களின் தேர்தலை காலாகாலத்தில் நடத்த விரும்பாது, காலத்தைக் கடத்திக்கொண்டு வந்தனர். இவ்வாறு அவர்கள் காலங் கடத்தி வந்ததற்குக் காரணம் வெளிப்படை!

அங்குள்ள நகராட்சி அமைப்புக்கள், அன்று அப்பகுதியைத் தனது கைக்குள் வைத்திருந்த பிரெஞ்சு அரசு அதற்கென இயற்றிய 1880-ம் ஆண்டைய சட்டத்தின்படி அமைக்கப்பட்டவைகளாகும். அந்தச் சட்டப்படி அமைக்கப்பட்டு இன்றளவும் செயல்படுத்தப்பட்டு வருகின்ற நகராட்சி மன்றங்களின் ஆயுட்காலம் ஆறாண்டுகளாகும். ஆறாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடைபெற்று, அத்தேர்தலில் வெற்றி பெறக்கூடிய பெரும்பான்மைக் கட்சியினர், நகராட்சி மன்றங்களின் நிர்வாகப் பொறுப்பை ஏற்பது வழக்கத்தில் இருந்துவருகிறது.

அந்தப் பழைய பிரெஞ்சுச் சட்டத்தின் அடிப்படையில் நகராட்சி மன்றங்கள் அமைக்கப்பட்டிருந்த போதிலும், இப்பொழுது மற்றப் பகுதிகளில் நடைமுறையில் கையாளப்பட்டு வருகின்ற மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்படிதான் அதற்கான தேர்தல் முறை நடைபெற்று வருகிறது.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்கீழ் அங்கு தேர்தல் நடைபெறுவதால், இதுவரையில் கையாளப்பட்டிராத முறையில், ஷெட்யூல்டு வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கென இடங்களை ஒதுக்குகின்ற முறை, முதன்முதலாக இத்தேர்தலில்தான் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பிரதிநிதித்துவ ஏற்பாட்டைப் பொறுத்த வரையில், இது ஒன்றுதான் இத்தேர்தலில் ஏற்பட்டிருக்கின்ற புதிய போக்கு!

பிரெஞ்சு அரசு ஏற்படுத்திய பழைய சட்டத்தின்படி, நகராட்சிகளின் காலமும், நகராட்சித் தலைவர்களின் பதவிக்காலமும், ஆறு ஆண்டுகள் என வரையறை செய்யப்பட்டிருந்தபோதிலும், ஆறு ஆண்டுகள் முடிந்து தேர்தலை நடத்துவதில் ஏதாவது தடையேற்படும்பட்சத்தில், அதற்கான ஓர் ஏற்பாடும் அந்தப் பழைய பிரெஞ்சு சட்டத்தில் செய்யப்பட்டிருந்தது. அதன்படி, ஓர் ஆறு மாத காலத்துக்குக் குழு ஒன்றை நியமித்து, அக்குழுவிடம் நகராட்சிமன்றங்களின் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைக்கலாம் என்ற அதிகாரம், மாநில ஆளுநருக்கு அளிக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட அவசர காலத்தில் மேலும் ஆறு மாத காலத்துக்கு, அதே முறையைப் பின்பற்றி நகராட்சிமன்றங்களின் நிர்வாகப் பொறுப்பை நடத்திவரவும் ஆளுநருக்கு அதிகாரம் தரப்பட்டிருந்தது.

ஆனால், பிரெஞ்சு அரசு இயற்றிச் செயல்படுத்திவந்த மேற்படி சட்டத்தில், தான் விரும்பிய காலம்வரையில் நகராட்சிமன்றங்களின் தேர்தல்களை நடததாமல் ஆறு ஆறு மாதங்களாகத் தள்ளிப் போட்டுவரக் காங்கிரசுக் கட்சியினர் திருத்தம் செய்துகொண்டனர். அத்திருத்தச் சட்டத்தின் துணையினால், சென்ற ஆண்டே நடைபெற்று முடிந்திருக்கவேண்டிய நகராட்சிகன்றங்களின் தேர்தலை, இதுவரை தள்ளிக்கொண்டேவந்திருக்கின்றனர் -- அங்கு ஆட்சிப் பொறுப்பிலிருந்த காங்கிரசுக் கட்சியினர்!

அங்கு நகராட்சி மன்றத் தேர்தல்களைக் காலாகாலத்தில் நடத்தாது காங்கிரசு ஆட்சியினர், ஏன் இப்படித் தள்ளிப்போட்டுக் கொண்டே வந்திருக்கின்றனர் என்பது சிந்தனைக்குரியதாகும். இச்சிந்தனை மூலம் வெளிப்படக்கூடிய விளக்கம் ஒன்றே ஒன்றுதான்; அதாவது, 'தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்கு வெற்றி கிடைக்கப்போவதில்லை' என்ற முடிவு, காங்கிரசு ஆட்சியினரை அச்சுறுத்திக்கொண்டே இருந்திருக்கிறது. 'தேர்தலை நடத்தித் தோல்வியைத் தழுவிக்கொள்ள வேண்டாம்' என்பதற்காகவே காங்கிரசு ஆட்சியினர், தேர்தலைத் தள்ளிப் போட்டுக்கொண்டே வந்திருக்கின்றனர்.

இப்பொழுதும்கூட மாநில ஆட்சியில் காங்கிரசுக் கட்சியினரே இருந்திருக்கும் பட்சத்தில், நகராட்சி மன்றங்களில் தேர்தலை நடத்த அவர்கள் துணிந்திருப்பார்களா என்பது சந்தேகமே! அவர்கள் இப்பொழுது ஆட்சிப் பொறுப்பில் இல்லை!

'நகராட்சி மன்றங்களுக்கான தேர்தலை உடனடியாக நடத்தக் கூடாது' என இந்திய அரசிடம் அப்போது காங்கிரசு ஆட்சியினர் வற்புறுத்தத்தான் செய்தனர். இதற்கு எதிராக எதிர்க் கட்சியினரும், 'தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும்' எனத் தீவிரமாக முயற்சித்தனர். இம்முயற்சி வெற்றியும் பெற்றுவிட்டது.

இதன்படி, அக்டோபர் மாத இறுதிக்குள்ளாகவே நகராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடைபெற்று முடிந்திருக்க வேண்டும். ஆனால், காங்கிரசு அமைச்சரவைக்கு ஏற்பட்டுவிட்ட வீழ்ச்சியின் விளைவாக செப்டம்பர் மாதத்திலேயே சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு ஆட்சிப் பொறுப்பைக் குடியரசுத் தலைவர் ஏற்றுக் கொண்டுவிட்டதால், அறிவித்திருந்தபடி அக்டோபரில் தேர்தல்களை நடத்த முடியாமல் போய்விட்டது.

இத்திங்கள் 16-ம் நாள் நடைபெறக்கூடிய பாண்டிச்சேரி—காரைக்கால் பகுதிகளின் நகராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பற்றிய வரலாறு இதுதான். இத்தேர்தலில், அங்குள்ள மக்களின் பொறுப்பு பற்றி நாளை எழுதுவோம்.

—கா. க.

கடந்த காலத்தில் நடந்துவிட்ட தவறுகள்!

இனியேனும் திருத்திக்கொள்ளப்படுமா?

சென்னை, டிச. 5—

"விவசாயம், தொழில் வளம், சமூகக் கொள்கைகள், அரசியல் முடிவுகள், பொதுத் துறைத் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட தோல்வி, அழிக்கப்படுவதினின்று வறுமையைக் காப்பாற்றிவிட்டன; அதாவது, வறுமையை அழிக்கத் தவறிவிட்டன!

"கடந்த பதினைந்தாண்டுகளில் விவசாயத் துறைச் சாதனைகள், எதிர்பார்த்ததைவிடக் குறைவாக வீழ்ந்துவிட்டதால், மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

"சமூகத்தில் ஏற்றத் தாழ்வைப் பெருக்காத வகையிலும், பணக் குவிப்பை உருவாக்காத வகையிலும் தேசிய வருமானத்தைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

"வளரும் பொருளாதாரத்தில் பணவீக்கப் போக்கு இரண்டு முதல் இரண்டரைச் சதவிகிதம்வரை தவிர்க்க முடியாதது; விரும்பத்தக்கதும் கூடத்தான்; ஆனால், பத்து அல்லது பன்னிரண்டு சதவிகிதம்வரை பண வீக்கத்தை வைத்துக் கொள்வது இயலக்கூடியதன்று!

"எனவே, விலைவாசி மட்டத்தில் நிலையான தன்மையை உறுதிப்படுத்தத்தக்கவகையிலும், செலவுகளைக் கட்டுப்படுத்தத் தக்கவகையிலும் எச்சரிக்கையாகத் திட்டமிடப்பட வேண்டும்.

"விலைவாசி மட்டத்தில் நியாயமான நிலையை உறுதி செய்யத்தக்க வகையில், உணவுத் தானியங்கள் ஆபத்துக் காலத்தைச் சமாளிக்கத்தக்கவண்ணம் இருப்பு வைக்கப்பட வேண்டும்."

---பி. எஸ். லோகநாதன்

(கருத்தரங்கு ஒன்றில்)

பெங்களூர் கடிகாரத் தொழிற்சாலை

புதிய வகைகளைத் தயாரிக்கத் திட்டம்

பெங்களூர், டிச. 5—

தேதிகளைக் காட்டும் கடிகாரங்களையும், சாவி தராமலே தானாக இயங்கும் கடிகாரங்களையும் எச். எம். டி. கடிகாரத் தொழிற்சாலை, பெரும் அளவில் தயாரிப்பதற்கேற்ற அளவில் விரிவுபடுத்தப்படவிருக்கிறது; இது சம்பந்தமான திட்டங்கள், அரசின் ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

புதுவையில் காங்கிரசுக் கட்சி திருவிளையாடல்

காவல்துறையின் பாதுகாப்புடன் நடைபெறுகிறது

நாள்தோறும் கழகத் தோழர்கள் தாக்கப்படும் அக்கிரமம்

கவர்னரிடம் முறையிட்டு நீதி கோர மாவட்டச்செயலாளர் முயற்சி

புதுவை, டிச. 6—

புதுவையில் பல பகுதிகளில் காங்கிரக்க்காரர்களின் வெறியாட்டம் தலைவிரித்தாடுகிறது!

காவல்துறையினர் கண்காணிப்பற்ற நிலை கடத்தல்காரர்களுக்கும், ரௌடிகளுக்கும் பாதுகாப்புத் தருகிறது!

கழகத் தோழர்கள் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றனர்!

நீதிக்குப் புறம்பான முறையில், சட்டம் -- அமைதிக்குப் பங்கம் ஏற்படும் அளவுக்குக் காவல் துறையினர் நடந்துகொள்ளுகின்றனர்!

பாகூர் கொம்யூன் நிர்ணயப்பட்டு கிராமத்தில் பொது இடத்தில் ஏற்றி இருந்த கழகக் கொடியைத் திடீர்க் காங்கிரசுக்காரர் சானகிராமன் என்பவர் சில காலிகளின் துணையுடன் இறக்கினார்; செய்தி அறிந்த கழக ஆதரவாளர் முருகேசன் என்பவர், 'ஏன் கொடியை இறக்குகிறீர்கள்? இது நியாயமா?' என்று கேட்டதற்கு மேற்படி சானகிராமனும், 20 அடியாட்களும் அவர் வீட்டின்முன் சென்று பயங்கர ஆயுதங்களுடன் தாக்கிவிட்டுச் சென்றனர்!

இதுபற்றிப் பாகூர் காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது; ஆனால் காவல் நிலைய அதிகாரி கந்தசாமி என்பவர், புகார் மனுவை ஏற்றுக்கொள்ளவில்லை; 'தேர்தல் காலத்தில் இதெல்லாம் சாதாரணம்; போய் வேலையைப் பாருங்கள்' என்றாராம்; உடனே மாவட்டச் செயலாளரிடம் நிலைமையை விளக்கிச் சொன்னதன் பேரில், மாவட்டச் செயலாளரே காவல்நிலையத்திற்குச் சென்று, 'நிலைமையை இப்படிக் கண்டும் காணாததுமாக இருப்பதால்தான் கழகத்தோழர்கள் தாக்கப்படுகிறார்கள்; இப்படிப் பாராமுகமாக இருந்ததால் தான் சோரியங்குப்பத்தில் எங்கள் கழகத் தோழர் வலது கை துண்டிக்கப்பட்ட நிலை ஏற்பட்டது' என்று நிலைமையை எடுத்துச் சொன்னதும், காவல்நிலைய அதிகாரிக்குக் கோபம் ஏற்பட்டு 'காவல் நிலையத்தைவிட்டு வெளியேறு' என்றும், வாய்க்கு வந்தபடியும் பேசினார்.

உடனே, மாவட்டச் செயலாளர் தோழர் எம். ஏ. சண்முகம், 'இவ்விடம் நேர்மையை எதிர்பார்க்க முடியாது; மேல் அமைப்புக்குத் தெரிவிக்கலாம்' என்று கூறி அவ்விடத்தைவிட்டு வெளியேறினார்.

பின்னர் போலீசு சூப்பரிண்டெண்டு அவர்களிடத்தில் இது பற்றி முறையிடப்பட்டது. அவரும் புகாரை எடுத்துக்கொள்வதாக இல்லை; அப்போதுதான் புரிந்தது--காவல்துறை காங்கிரசுக்காரர்களின் கைப்பாவையாக இருந்துவருவது!

மாவட்டச் செயலாளர், இதனைக் கவர்னரிடம் முறையிட முடிவு செய்துள்ளார்.

இதேபோன்ற வெறிச் செயல்கள் புதுவையில் பல பகுதிகளிலும் நடந்தவண்ணம் இருக்கின்றன. புள்ளச்சாவடி என்ற ஊரில் புடலங்காய் என்ற மண்ணாங் கட்டியை மண்டையை உடைத்துக் காலை முறித்திருக்கின்றனர். அவர் 15 நாள் மருத்துவமனையில் இருந்தார்.

கழகத் தோழர்களுக்கு ஆதரவாக உள்ள ஊர்ப் பெரிய மனிதர் பண்டா செட்டியார் நிலத்தில் போட்டிருந்த ஒரு காணி மணிலாக் கொட்டையை காங்கிரசுக்காரர்கள் அழித்துச் சூறையாடிவிட்டார்கள்!

புதுவை நீதிபதி கோவிந்தராசனின் உடன் பிறந்த அண்ணன் இந்த 'நல்ல' காரியத்தில் ஈடுபட்டுவருவதாகக் கூறப்படுகிறது. இன்னும் பல அக்கிரமச் செயல்களையும் அவர் செய்துகொண்டு வருகிறார்.

ஆலம்குப்பத்தில் காங்கிரசுக்காரர்கள் இருவண்ணத் துணி போட்டுச் செல்லும் கழகத் தோழர்களைக் கூப்பிட்டுத் துணியை வாங்கிக்கொண்டு, 'இனி இந்தப் பக்கம் தி. மு. க. கரை போட்ட துண்டு போட்டு வராதே' என்று மிரட்டி வருகிறார்களாம்.

அரியாங்குப்பத்தில் முன்னாள் அமைச்சர் இரத்தினவேலு என்பவர், கழகத் தோழர்களைப் பயமுறுத்தி, 'போலீசு எங்கள் கையில் இருக்கிறது; மரியாதையாக வீடுபோய் வேலைகளைக் கவனியுங்கள்' என்று கூறிவருகிறாராம்!

நாள்தோறும் குறைந்தபட்சம் 10 கழகத் தோழர்கள் காங்கிரசுக் காலிகளால் தாக்கப்படுகிறார்கள்! 'எந்த நேரத்தில் என்ன நடக்குமோ' என்ற பீதி நிலவுகிறது!

1—12—68 இரவு பூர்ணாம்குப்பம் பொதுக்கூட்டத்திற்குச் சென்று திரும்பிய மாவட்டச் செயலாளரை, காங்கிரசுக் காலிகள் 5-பேர் வழிமறித்தனர்; காரை ஓட்டியவரின் திறமையால் தப்பித்துக்கொண்டார். காரின் மீது கற்களை வீசியதால், காருக்குச் சேதம் ஏற்பட்டது.

தமிழில் 'ஆகமங்கள்'

சென்னை, டிச. 5—

தமிழ்நாட்டில் மத நிறுவனங்களிடம் உள்ள ஆகமங்களை, மொழி பெயர்த்து வெளியிடுவது பற்றி மாநில அரசு ஆய்வு செய்து வருகிறது.

இந்து மத அறநிலையப் பாதுகாப்புத் துறையின் நிர்வாக அறிக்கையில் இந்தத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

"பள்ளிக்குச் செல்லும் சிறுவர்களுக்குப் பகல் உணவு அளிக்குமாறு மத நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன" என்றும் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

ஏழைகள் துயர் அறிந்தவரே இன்று ஆட்சியில் உள்ளனர்

"இன்று ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் நாங்கள் என்ன -- செல்வந்தர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களா? இல்லை; மிகமிகச் சாமானியமானவர்கள். உங்களுடைய அனுதாபங்களைப் பெறுவதற்காக இதனை நான் சொல்லவில்லை. மக்களின் சுகதுக்கங்களை அறிந்துகொண்டவர்கள்தான் இன்று பேரறிஞர் அண்ணா தலைமையில் ஆண்டுவருகிறார்கள்.

"பாரதி உயிருடன் இன்று இருந்திருந்தால் 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று பாடியதை, 'எல்லோரும் இந்நாட்டு மந்திரிகள்' என்று மாற்றிப் பாடியிருப்பார். உண்மையில் மந்திரிகள் நாங்கள் அல்லர் -- மக்கள் அனைவரும் மந்திரிகள் தான். உங்களது நலன்களை -- மேம்பாடுகளைவிட முக்கியமானது எங்களுக்கு வேறில்லை. உங்களுடன் இரண்டறக் கலந்துவிட்டவர்கள் நாங்கள்.

"பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து எப்படிப் போராட்டம் நடந்ததோ, அப்படியே காங்கிரசு எதேச்சாதிகாரத்தை எதிர்த்தும் போராட்டம் நடந்தது. இந்த மாற்றத்தைக் காண எத்தனை நெருப்பாறுகளைத் தாண்டி வந்திருக்கிறோம் -- எத்தனை வேட்டுச் சத்தங்களைக் கேட்டிருக்கிறோம் -- எத்தனை பேரின் கண்ணீரைக் கண்டு கலங்கியிருக்கிறோம் -- எத்தனை வாலிப உள்ளங்கள் காராக்கிரகத்தில் துன்பப்பட்டுள்ளன! எத்தனை பேர் உயிர்களை இழந்துவிட்ட பிறகு இந்த அரசு—தொழிலாளிகள் அரசு—விவசாயிகள் அரசு—ஏற்பட்டு இருக்கிறது! இந்த அரசைக் கவிழ்த்துவிட நினைப்பவர்கள் தொழிலாளர்களுக்கு ஆதரவாக இருக்க மாட்டார்கள்; தொழிலாளர்களுக்கு -- விவசாயிகளுக்கு சவக்குழி தோண்டுபவர்களாகத்தான் இருப்பார்கள்.

"தமிழகத்திலுள்ள விமான நிலையத்தினுள்ளே அனுமதியின்றிப் போக அமைச்சருக்குக்கூட அதிகாரம் கிடையாது. இங்குள்ள அஞ்சல் நிலையத்தினுள் கலெக்டர் போய் அதிகாரம் செய்ய முடியாது. அதேபோல்தான் இரயில் நிலையமும், வருமான வரி அலுவலகமும்! ஆனால் அந்த அலுவலகங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு மட்டும் மாநில அரசிடம் இருக்கிறது. இதைச் சாதாரணமாகச் சொல்லவில்லை -- ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகள் அமைச்சர் பதவியிலிருந்துவிட்டுத்தான் இவைகளைச் சொல்கிறேன்.

"நமது ஊரிலே கரும்பு விளைகிறது; சர்க்கரையாக மாற்றும் ஆலையும் இருக்கிறது; ஆனாலும், அந்தச் சர்க்கரையை எடுத்துத் தரும் உரிமையைத் தரவேண்டியது மத்திய அரசேயாகும்.

"'100 பேருக்கு மேல் சாப்பாடு போடக்கூடாது' என்று ஓர் உத்தரவு இருந்துவந்தது. அந்த உத்தரவு காங்கிரசு ஆட்சியினால் போடப்பட்டதாகும். அந்த உத்தரவை 'வேண்டாம்' என்று சொன்னேன்; உடனே, டில்லியிலிருந்து, 'எப்படி அந்த உத்தரவை நீக்கலாம்?' என்று கேட்டுக் கடிதம் வந்தது! அதுமட்டுமா? 'திங்கட்கிழமை தோறும் ஓட்டல்களைத் திறந்துவைக்கக் கூடாது' என்றும் ஓர் உத்தரவு இருந்தது; அந்த உத்தரவு அகற்றப்பட்டது. உடனே, மத்திய அரசிடமிருந்து கேள்வி வந்தது---'எப்படி எல்லா ஓட்டல்களையும் திறக்கும்படிச் சொல்லலாம் என்று கேட்கப்பட்டது?"

--அமைச்சர் கே. ஏ. மதியழகன்

(மதுரை மகிழ்ச்சி விழாக் கூட்டத்தில்)

காங்கிரசின் 'கதை'யை முடிப்போம்!

"பிறந்த பொன்னாட்டிற்கு, 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்ட வேண்டும் என்று நாம் கோரிக்கை விடுத்தபோது, அதனை, முன்னாள் காங்கிரசுத் தலைவர் காமராசர் கேலி பேசினார்!

"'தமிழ்நாடு' என்று பெயர் வைத்தால் எல்லோருக்கும் சோறு கிடைத்துவிடுமா?' என்று கேட்டார்; 'தமிழ்நாடு என்று பெயர் வைத்தால் அமெரிக்காவிற்குத் தெரியுமா?' என்று பக்தவத்சலம் கேட்டார்; அவர்களுக்கு உண்மையிலேயே இந்தப் பிரச்சினையில் நல்லெண்ணம் இருக்குமானால் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு நன்றி தெரிவித்திருக்க வேண்டும்.

"பத்தாண்டுகளுக்குமுன்பு தேவிகுளம், பீர்மேடு, தமிழ்ப் பகுதிகள் தமிழகத்துடன் இணைந்திட வேண்டுமென்று நாம் போராடியபோது, அப்போது முதலமைச்சராக இருந்த காமராசர், 'தேவியாவது -- குளமாவது -- மேடாவது' என்று கேலி செய்தார்! இதற்காக அனைத்து எதிர்க் கட்சியினரும் கிளர்ந்தெழுந்து போராடியபோது, அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டுக் கொடுமை இழைத்தார்! அப்படிப்பட்ட காமராசர் நாகர்கோயில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகிறாராம்!

"சங்கரலிங்கனார், 'தமிழ்நாடு' பெயர் மாற்றம் கோரி உண்ணாவிரதமிருந்தபோது முதலமைச்சராக இருந்த காமராசரோ, மற்ற அமைச்சர்களோ சென்று அவரைப் பார்க்கவில்லை!

"ஆனால், சங்கரலிங்கனார் உண்ணாவிரதமிருந்த 30-வது நாளன்று அறிஞர் அண்ணா அவர்கள் அவரைச் சந்தித்தார்; அப்போது அவர், 'தமிழ்நாடு பெயர் மாற்றத்துக்காகப் போராடுவதுதான் எனது இலட்சியம்; அதற்காக எனக்குப் பிறகு நீங்களெல்லாம் பாடுபடவேண்டும்' என்றும் கேட்டுக் கொண்டார்.

"சங்கரலிங்கனார் இறந்த பிறகு ஓர் அனுதாப வார்த்தைகூட கூறாத காமராசர், 'அவர் எப்படி இறந்துவிட்டார்?' என்று செய்தியாளர்கள் கேட்டபோது, 'சோறு திங்கலே -- செத்துப் போயிட்டார்' என்று கேலி பேசினார்! அப்படிப்பட்டவர்தான் இங்கே போட்டியிடுகிறார்!

"சங்கரலிங்கனார் இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில், தமிழ்நாடு பெயர் மாற்றத்தை நிறைவேற்றிய அண்ணாவின் ஆட்சிக்கு ஆதரவளிக்கும் காமராசரைத் தோற்கடிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

"நாகர்கோவில் தொகுதி நாடாளுமன்ற இடைத் தேர்தலில் கழகத் தோழர்கள் தீவிரமாகப் பாடுபட வேண்டும். இந்தத் தேர்தலில் நிற்பது சுதந்திராக் கட்சியினரே என்றாலும் நாம் நமது வேட்பாளராகக் கருதி அதற்காகத் தீவிரமாகப் பாடுபட வேண்டும்.

"நாகர்கோவில் இடைத் தேர்தலில் நாம் பெறும் வெற்றி, காங்கிரசின் கடைசி அத்தியாயத்தை முடித்துவைக்கும் திருப்பணியாகும். ஆகவே, இதனை மனதில்கொண்டு கழகத்தவர் பாடுபடவேண்டும் என்று மீண்டும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்."

--என். வி. நடராசன்

(நாகர்கோவில்--கோட்டாறு கூட்டத்தில்)

சர்க்கரை ஒதுக்கீடு

அளவு குறையாது

தமிழ்நாட்டுக்கு இம்மாத சர்க்கரை 'கோட்டா'வில் வெட்டு எதுவும் இல்லை.

மாதா மாதம் 6000 டன் சர்க்கரை தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்படுகிறது; சில நிர்வாகக் காரணங்களை முன்னிட்டு மத்திய அரசு, நவம்பர் மாத கோட்டாவை இரண்டு தடவைகளில் அனுப்ப முடிவு செய்தது; முதல் தடவையில் 4000 டன் ஏற்கனவே பெறப்பட்டு பல்வேறு மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மீதமுள்ள 2,000 டன் சர்க்கரை டிச. 22-ம் நாளுக்குள் எதிர்பார்க்கப்படுகிறது; அது கிடைத்ததும், எல்லா மாவட்டங்களுக்கும் வழங்கப்படும்.

"ஆகவே, தமிழ்நாட்டுக்கோ அல்லது மாவட்டங்களுக்கோ சர்க்கரை ஒதுக்கீட்டில் வெட்டு எதுவும் இல்லை" என்று சிவில் வழங்குத் துறை ஆணையர் கே. திரவியம் கூறியுள்ளார்.

பொறுமை அவசியம்!

நமது எதிரிகளின் மனமாற்றத்திற்காக நாம் பொறுமையுடன் முயல வேண்டும்!

—காந்தியார்

கச்சத் தீவுப் பிரச்சினை --- தொடர்ந்து பேச்சு நடக்கும்

இலங்கை --- இந்திய ஒப்பந்த நடைமுறையில் மனநிறைவு

இரு நாட்டுத் தலைமையமைச்சர்களின் கூட்டறிக்கை

புதுடில்லி, டிச. 6—

"கச்சத் தீவுமீது ஆதிபத்திய உரிமைபற்றியும், பாக ஜல சந்தி, மன்னார் வளைகுடாவில் மீன் பிடிக்கும் உரிமைகள் உட்படப் பொதுவான அக்கறை உள்ள பிரச்சினைகள் பற்றியும் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடைபெற வேண்டும்"

என்று இலங்கை -- இந்தியத் தலைமை அமைச்சர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இப்பகுதியில் இரு நாடுகளிடையே பயனுள்ள ஒத்துழைப்புக்கான சாத்தியக்கூறுகளை இரண்டு தலைவர்களும் முன்னோட்டமாக ஆராய்ந்தனர்.

இலங்கையில் உள்ள இந்தியர்கள்பற்றிய 1964-ம் ஆண்டைய இந்தியா -- இலங்கை ஒப்பந்தத்தை இருசாராரும் ஒத்துழைப்பு, நல்லெண்ண உணர்வுடன் தொடர்ந்து செயல்படுத்தத் தாங்கள் உறுதி கொண்டிருப்பதாக இருவரும் தெரிவித்தனர். இந்த ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி இருவரும் திருப்தி தெரிவித்தனர்.

நட்புறவு ஒத்துழைப்பு உணர்வுடன் இந்தியா -- இலங்கை ஒப்பந்த நடைமுறையையும், கச்சத் தீவுப் பிரச்சினையையும் அணுகத் தாங்கள் உறுதி கொண்டிருப்பதாகவும் இருவரும் தெரிவித்துள்ளனர்.

இந்தியா -- இலங்கை ஒப்பந்தத்தின்கீழ் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் திரும்புவோர் இப்போதையச் செலாவணிக் கட்டுப்பாடுகளின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள முழு வரம்புவரை தங்களுடைய சொத்துக்களை (ஒரு இலட்சம் ரூபாய்வரை) தங்களுடன் கொண்டுவர முடியும் என்று இலங்கைத் தலைமையமைச்சர் தெரிவித்தார்; இந்த முடிவை இந்திரா காந்தி பாராட்டினார்.

1964-ம் ஆண்டைய இலங்கை-இந்தியக் குடியுரிமை உடன்படிக்கையில் சேர்க்கப்படாத முக்கியப் பிரச்சினை, மீதியுள்ள இந்திய வமிச வழியினரின் வருங்காலம் பற்றியதாகும். இவ்வகையினர் 1,50,000 பேர் இலங்கையில் உள்ளனர். இவர்களின் வருங்காலம் பற்றிய முக்கியமான பிரச்சினை குறித்து இருவரும் பேசினர்; ஆனால் தற்போதைக்கு முடிவு செய்யாமல் ஒத்திவைத்துள்ளனர்.

நடப்பு ஒப்பந்தத்தின்கீழ் 3 இலட்சம் இந்திய வமிசா வழியினருக்கு இலங்கைக் குடியுரிமையும், 5,25,000 இந்தியருக்கு இந்தியக் குடியுரிமையும் வழங்கும் திட்டம் மேற்கொண்டு முன்னேறியதும் மீதியுள்ள இந்தியர் பிரச்சினையைக் கவனித்துக் கொள்ளலாம் என்று கருதப்பட்டது.

வெற்றி நமக்குத்தான்!

நமது உள்ளத்தின் தீய நோக்கங்களுடன் ஒத்துழைக்காமலிருந்தால் இறுதியில் வெற்றி நமக்குத்தான்!

—காந்தியார்

கல்வி அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

பம்பாய் பயணம்

சென்னை, டிச. 5—

தமிழகக் கல்வி--தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 7—12—68 அன்று பகல் 2-30 மணிக்கு விமானம் மூலம் புறப்பட்டு மாலை 4-20 மணி அளவில் பம்பாய் போய்ச் சேருகிறார்.

அன்று மாலை 6-15 மணிக்கு பம்பாய் தமிழ்ச் சங்கத்தில் அணுசக்தி பற்றித் தமிழில் எழுதப்பட்ட நூல் ஒன்றினை அவர் வெளியிடுவார்.

8—12—68 அன்று தாராவியில் பம்பாய் மாநில தி. மு. க. அளிக்கும் வரவேற்பில் கலந்துகொண்டு 9—12—68 அன்று காலை சென்னை வந்தடைவார்.

இந்தியாவின் ஆயுத பலம்

அச்சுறுத்தலை சமாளிக்கப் போதுமானது!

புதுடில்லி, டிச, 5—

"இந்திய இராணுவத்தின் போர்த் தளவாடங்கள், நாட்டுப் பாதுகாப்புக்கு இப்போது ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களைச் சமாளிப்பதற்கு போதுமானவையாகும்"

என்று பாதுகாப்பு அமைச்சர் சுவரண் சிங் மக்களவையில் கூறினார்.

"திட்டமிட்டுள்ளபடி நமது போர்த் தளவாடங்கள் நவீனமாக்கப்பட்டு வருகின்றன" என்று அவர் குறிப்பிட்டார்.

ஆனால், இந்தியப் போர்த் தளவாடங்கள் பற்றிய விவரங்களை அவையில் தெரிவிக்க அவர் மறுத்து விட்டார்.

இதுபற்றிய தகவல்களை அவைக்குத் தெரிவிக்க மறுக்கப்படுகிறது என்றும், ஆனால் வெளிநாட்டுப் பத்திரிகைகள் இது சம்பந்தமாக ஏராளமான விவரங்களை தெரிவிக்கின்றன என்றும் சாரதா முகர்ஜி குறை கூறியதற்கே அமைச்சர் மேற்கண்டவாறு பதில் அளித்தார்.

"இந்திய இராணுவத்திற்கான போர்த் தளவாடங்கள் உள்நாட்டில் தயாரிக்கப்படுகின்றன; வெளிநாடுகளிலிருந்தும் பெறப்படுகின்றன" என்றும் அமைச்சர் கூறினார்.

"அவைக்குத் தெரியாதது எதுவும் இல்லை; ஆனால், எவ்வளவு கேள்விகள் கேட்டாலும், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அல்லது வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்ட டாங்கிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று நான் சொல்லப் போவதில்லை" என்று அமைச்சர் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

பாலையைக் கடக்க இயந்திரச் சாதனம்

பாலைவனப் பகுதிகளில் இரவு நேரத்தில் பயணம் செய்வது மிகவும் கடினமான காரியம்.

பாதையே தெரியாத நிலையிலிருந்து படிப்படியாகச் சிறிது முன்னேற்றம் கண்டுள்ளனர் இப்போது!

ஆயினும், இப்போதைய முறை நிச்சயமற்றதாக இருக்கிறது --- ஒரு புழுதிப் புயல் வீசினால் எங்கும் இருள் -- எதுவுமே தெரியாது!

இதற்காக ஒரு பிரிட்டிஷ் நிறுவனம் புதிய வழி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது; என்ன புயல் வீசினாலும் பாதிக்காமல் வழிகாட்டும் புதிய வசதியை இந்நிறுவனத்தினர் கண்டுபிடித்துள்ளனர்; இதற்குப் பயன்படுவது கம்ப்யூட்டர்.

பாதையை விளக்கிக் காட்டும் இந்த வகைச் சாதனங்கள் ஏற்கனவே பிரிட்டிஷ் இராணுவத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன; ஆயினும், இத்துறையில் தினசரி உபயோகத்திற்கு இப்போதுதான் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்படுகிறது.

நாட்டு மக்களின் நன்னம்பிக்கையைப் பெற்றோம்!

ஏழை எளியோர் நல்வாழ்வுக்கு இன்று பாடுபடுகிறோம்

காங்கிரசார் எரிச்சலுக்குக் காரணம் -- அமைச்சர்கள் மு. கருணாநிதி, கே.ஏ. மதியழகன் விளக்கம்

சென்னை, டிச. 6—

"'ஏதாவது நடக்காதா -- நாம், ஆட்சிக்கு வந்துவிட மாட்டோமா?' என்று காங்கிரசார் நினைக்கின்றனர்! தமிழகத்தில் இப்போது அமைச்சர்களாக உள்ளவர்கள், மிட்டாதாரர்கள் அல்லர் --- ஐசுவரியச் சீமான்கள் அல்லர்! ஆனால் அவர்கள், ஏழை எளியவர்களின் நலனுக்காகப் பாடுபடுகின்ற சாமானியர்கள் -- சாதாரணமானவர்கள்; இது அவர்களுக்குப் பொறுக்கவில்லை --- அதனால், சிறிய காரியத்தையும் பெரிது படுத்திக் காட்டும் செயலில் இறங்கியுள்ளனர்!"

---அமைச்சர் மு. கருணாநிதி

"கழக அரசு, சாமானியமாக ஏற்பட்டுவிடவில்லை; இருபது -- இருபத்தைந்து ஆண்டுக்காலமாகப் பல்லாயிரக்கணக்கான கழகத் தோழர்கள், சிறைபட்டு --- அடிபட்டு --- சொத்துச் சுகங்களை இழந்து -- நாட்டு மக்களின் நன்னம்பிக்கைக்கு உரியவர்களாகிய பின்னரே ஆட்சி கழகத்தின் கையில் வந்திருக்கிறது!"

---அமைச்சர் கே. ஏ. மதியழகன்

ஆயிரம்விளக்குத் தொகுதியைச் சார்ந்த வட்டங்களிலிருந்து மாநகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.க, மற்றும் முஸ்லிம் லீக் உறுப்பினர்களையும், மேயர் – துணை மேயரையும் பாராட்ட இராயப்பேட்டை --- பெருமாள் முதலி தெருவில், இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். மன்றச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில், அமைச்சர்கள் இருவரும் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டி விளக்கிக் கூறினர்.

அண்ணா சிகிச்சை நிதி -- அமைச்சர் மதியழகன் காணிக்கை

இந்தக் கூட்ட மேடையில், அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், அண்ணா அவர்களின் சிகிச்சை நிதிக்காக கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்களிடம் ரூ. 500 அளித்தார்.

மற்றும் இதே கூட்ட மேடையில் சட்டமன்ற உறுப்பினர் வெள்ளக்கோயில் கே. என். சாமிநாதன் ரூ. 1,001-ம்; கோவை செழியன் ரூ. 1,001-ம்; ஏ. எம். இராசா எம்.எல்.ஏ. ரூ. 250-ம்; மாநகராட்சி உறுப்பினர் ஏ. கி. புகழேந்தி ரூ. 25-ம்; வெ. பழனி ரூ. 25-ம் அளித்தனர்.

கூட்ட நிகழ்ச்சி

கூட்டத்திற்கு, தோழர் டி. என். கிருஷ்ணன் தலைமைதாங்கினார்.

சட்டமன்ற உறுப்பினர் ஏ. எம். இராசா, வெள்ளக்கோயில் சாமிநாதன், கோவை செழியன் ஆகியோரும் உரையாற்றினர்.

கே. ஏ. மதியழகன்

உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சுயராஜ்யம் கிடைத்து 20 ஆண்டுகளானபோதும், ஆண்ட காங்கிரசார் -- தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் -- உருப்படியான திட்டம் எதையும் செய்யவில்லை.

ஐந்தாண்டுத் திட்டங்களின் பெயரால் பல ஆயிரம் கோடி ரூபாய் பணத்தை சொல்லுவதற்கே அச்சந்தரும் அவ்வளவு பெருந் தொகைகளையும் ஊதாரித்தனமாகச் செலவிட்டார்கள்; இவ்வளவு செலவிட்டும்-சென்னை நகரக் குடிநீர் தட்டுப்பாடு தீர்ந்தததா? -- இல்லையே!

அமைச்சர் கருணாநிதி பொறுப்பேற்ற பிறகு -- அவர் கையொப்பமிட்டுத்தான் காவிரி நீர்த் திட்டம் வரவேண்டியுள்ளது. இன்று அதற்கான நிதி ஒதுக்கீடுகள் பற்றியும், நடந்து வருகிற வேலைகள் பற்றியும் பொதுப்பணி 'அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். அதுகேட்டு நான் பெரிதும் மகிழ்ந்தேன்.

கழக அரசின் திட்டங்கள் நிறைவேற வாய்ப்பளித்து எல்லாத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

மு. கருணாநிதி

அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபின் காங்கிரசாரின் அங்கலாய்ப்புப் போக்குகளைச் சுட்டிக் காட்டினார்; பரிசுச் சீட்டின் சிறப்புக்களை விளக்கினார்; சில காங்கிரசு ஏடுகள் செய்துவரும் நச்சுத்தனமான செய்திகளைச் சுட்டிக் காட்டி -- உண்மை நிலைகளை விளக்கினார்.

பின்னர் அவர், கழக ஆட்சியின் சிறப்பினை விளக்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"அறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சுட்டிக்காட்டியது போல், கறுப்புத் துணியாக இருந்து அதில் மை சிந்திவிட்டாலும் தெரியாது; ஆனால் வெள்ளைத் துணியில் ஒரு சிறு துளி மை பட்டுவிட்டாலும் தெரிந்துவிடும்.

தூய்மையாகச் சலவை செய்யப்பட்ட வெண்மையான ஆடையைப் போன்றது தி. மு. கழக ஆட்சி! தூய்மையைக் கிஞ்சிற்றும் எவராலும் குறைக்க இயலாது! பல கோடி தமிழ் மக்களின் மானத்தை மறைக்கவந்த ஆடை அது!

பசிப் பிணியால் வாடி வதங்கி வந்த மக்களிடை அந்நிலையைப் போக்கிட முனைந்து செயலாற்றுகிறது கழக ஆட்சி!

சென்னை, கோவை போன்ற -- வாங்கி உண்ணும் மக்கள் உள்ள பகுதிகளில், ரூபாய்க்குப் படி அரிசி போடும் ஆட்சி தி. மு. க. ஆட்சி!

நாகர்கோயிலில் போட்டியிடச் சென்றிருக்கும் காமராசர், 'தி. மு. க. ஆட்சி என்ன சாதித்தது?' எனக் கேட்கிறார்; நாகர்கோயிலில்கூட அரிசி, ஒன்றரை ரூபாய்க்குக் கிடைக்கிறது; இவர் கட்சியினர் ஆண்ட காலத்தில், கோவை நகரக் கடைத் தெருவில் அரிசி கேட்டு ஆர்ப்பாட்டம் நடத்திய போலீசு அதிகாரி அர்ச்சுனன் என்பவர், துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தப்பட்டது இன்றும் நம்முடைய நினைவிலிருக்கிறதே!

அப்படிப்பட்ட பசி -- பட்டினி நிலையிலிருந்து தி. மு. கழக அரசு, புதிய திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது!"

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க.

குழுக் கூட்ட அறிவிப்பு

"செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகக் கூட்டம் 8—12—68 காலை 9-மணிக்கு காஞ்சிபுரம் இராச வீதி, 115-ஏ. எண்ணுள்ள கட்டிடத்தில் நடைபெறும்; அதுபோது, கழக வளர்ச்சி, நகராட்சித் தேர்தல், மாவட்டக் கழக நிதி ஆகியவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

"மாவட்ட உறுப்பினர்களும், சிறப்பு அழைப்பாளர்களாகப் பொதுக் குழு உறுப்பினர்கள், சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதையே அழைப்பாக ஏற்றுத் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்"

என்று மாவட்டச் செயலாளர் கே. டி. எஸ். மணி கேட்டுக்கொள்கிறார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள், சங்கப் பிரதிநிதிகளுடன் 25 நிமிட நேரம் வரையில் மனம்விட்டு விரிவாக உரையாடினார்; ஒவ்வொரு பிரச்சினையையும் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் கோடிட்டுக் காட்டினார்; அரசும் -- ஊழியர்களும், 'இன்றோ நாளையோ' என்றில்லாமல், என்றும் ஒன்றிப் போக வேண்டியவர்கள்' என்றும் சுட்டிக்காட்டினார்.

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதி

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்காகத் தொகை அனுப்புமாறு கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப நிதியளித்த தோழர்கள்:—

	ரூ. காசு
நேற்றைய இதழ்த் தொடர்ச்சி	10,365.00
சென்னை எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ.	101.00
காஞ்சி சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ.	125.00
சென்னை-17 வழக்கறிஞர் டி. ஏ. எஸ். சாமி	100.00
தேனி இளங்கோவன் கலர் கம்பெனி—சு. இராசேந்திரன்	25.00
தேனி கே. காமராஜ்	10.00
சென்னை-7 சி. நடேசன்	5.00
திருப்பத்தூர் சி. கே. சின்னராசு எம்.எல்.ஏ.	505.00
நெல்லிக்குப்பம் ஏ. வி. தண்டபாணி	10.00
தெ. ஆ. மாவட்டப் பிரதிநிதி கொணமங்கலம் இராமசாமி	10.00
சென்னை 65-வது வட்ட மாநகராட்சி உறுப்பினர் கா. முருகேசன்	51.00
5-12-68 இராயப்பேட்டை கூட்டத்தில் கழகப் பொருளாளரிடம் அளித்த விவரப்படி:—	
அமைச்சர் கே. ஏ. மதியழகன்	500.00
கோவை செழியன்	1001.00
கே. என். சாமிநாதன் எம்.எல்.ஏ.	1001.00
ஏ. எம். இராசா எம்.எல்.ஏ.	250.00
சென்னை 77-வது வட்ட மாநகராட்சி உறுப்பினர் ஏ. கி. புகழேந்தி	25.00
சென்னை வெ. பழனி (வி. பி. எஸ். பிரிண்டர்ஸ்)	25.00
சின்ன சேலம் சி. வாசுதேவன்	50.00
சென்னை 75-வது வட்ட தி. மு. க.—மு. சீனிவாசன்	5.00
டாக்டர் வி. எஸ். நடராசன் எம்.டி.	51.00
அமைச்சர் ஏ. கோவிந்தசாமி	501.00
ஆக மொத்தம்	14,716.00

நிதி அனுப்ப வேண்டிய முகவரி:—

மு. கருணாநிதி, பொருளாளர்,
தி.மு.க. தலைமை நிலையம், இராயபுரம், சென்னை-13

சி.வி.எம். அண்ணாமலை

மருத்துவ மனையிலிருந்து இல்லம் திரும்புகிறார்

கடந்த 2—11—68 அன்று வயிற்றுக் கோளாறு காரணமாக சென்னை பெரிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட திரு. சி.வி எம். அண்ணாமலை எம்.எல் ஏ. அவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டபின் உடல் நிலை தேறி: நாளை (7—12—68) இல்லம் திரும்புகிறார்.

சில நாட்களுக்கு முழு ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் அவருக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

சந்திரனைச் சுற்றிவர மூவர் ஆயத்தம்

டிச. 21-ல் பயணம் துவங்கும்

கென்னடி முனை, டிச. 6—

அமெரிக்க விண்வெளி விமானிகள் பிராங்க் பார்மன், ஜேம்ஸ் லாவல், வில்லியம் ஆண்டர்ஸ் ஆகிய மூவரும் சந்திரனை வலம் வந்து திரும்பும் வரலாற்றுச் சிறப்புள்ள எட்டாவது அப்பாலோ விண்வெளிப் பயணம் டிசம்பர் 21-ந் தேதி துவங்கும்.

கிறிஸ்துமஸ் விழாவின்போது விமானிகள், சந்திரனுக்கு அருகில் சென்று--பத்து முறை அதை வலம் வந்து---பின்பு டிசம்பர் 27-ஆம் நாள் பூமிக்குத் திரும்ப வேண்டுமென்பது திட்டம்.

சந்திரனின் மேல்பரப்பிலிருந்து 112 கிலோ மீட்டர் (ஏறத்தாழ 100 மைல்) தொலைவுள்ள ஒரு விண் வீதியில் அவர்கள் சந்திரனைச் சுற்றிவருவார்கள்.

7,50,000 கி. மீ. தொலைவுள்ள இந்த விண்வெளிப் பயணத்தை மேற்கொள்ளுவதற்கு முன்பு விமானிகள், அப்பாலோ கப்பவின் செயற்கைச் சூழ்நிலைகளில் பயிற்சிகளும், ஒத்திகைகளும் நடத்துவார்கள். குறிப்பாக சந்திரனைச் சுற்றிவரும் விண் வீதியில் செல்லுவதற்கும், பின்பு பூமிக்குத் திரும்பி வருவதற்கும் பயன்படுத்தும் ஏவுகணைகளை இயக்குவதில் சிறப்புப் பயிற்சி பெறுவார்கள்.

நிர்ப்பந்த நிலையில் காமராசர்!

நிறுத்திவைத்தவர்கள் நல்ல நட்புக்கொண்டவர்கள் அல்லர்!

நாகர்கோயில் இடைத்தேர்தல் பற்றி இராஜாஜி

சென்னை, டிச. 5—

நாகர்கோயில் இடைத்தேர்தல் குறித்து சுதந்தராக் கட்சித் தலைவர் இராஜாஜி பின்வருமாறு கருத்தெரிவித்துள்ளார்:—

"டாக்டர் எம். மதியாஸ் அவர்களை நாகர் கோவில் இடைத்தேர்தலில் சுதந்தராக் கட்சி வேட்பாளராக நிறுத்திவைப்பதென்று தமிழகச் சுதந்தராக் கட்சி செய்த முடிவைக் கட்சியின் மத்திய பார்லிமெண்ட் குழுவும் அங்கீகரித்துவிட்டது.

"தி. மு. க.-வும் முஸ்லீம் லீகும், சுதந்தராக் கட்சி வேட்பபளருக்கு முழு ஆதரவும் நல்குகின்றன.

திரு. காமராஜ் அவர்களை இந்த இடைத்தேர்தலில் ஈடுபடுத்துவதற்கு முயலுபவர்கள் அவரிடம் நல்ல நட்புக்கொண்டவர்களா-என்று சொல்ல முடியாது; எனினும், இந்தத் தேர்தலிலிருந்து பின்வாங்குவது, திரு. காமராஜ் அவர்களுக்கு இயலாது என்றே தோன்றுகிறது.

காங்கிரசு வெற்றி பெற்றாலும் அது உண்மையில் வகுப்புவாதம் பெற்ற வெற்றியாகவே இருக்கும். எனவே, வெற்றி கிடைத்தாலும் அதைக் காங்கிரசு உண்மையான பெருமையின் அடையாளமாகக் கொள்ள முடியாது.

காங்கிரசு தோல்வியடைந்தாலோ, அது ஒரு தனி நபருக்கு மகத்தான விபத்தாகும். இருந்த போதிலும், தாம் நிற்கப்போவதில்லை என்று இப்போது திரு. காமராஜ் சொல்ல இயலாது.

கம்யூனிஸ்டுகளின் எல்லாப் பிரிவினரும் சுதந்தராக் கட்சி வேட்பாளரை எதிர்ப்பார்கள். காங்கிரசுக்கே வாக்கு அளிப்பதன் மூலமோ, தாங்கள் வேட்பாளராக ஒருவரை நிறுத்திவைப்பதன் மூலமோ, அவர்கள் காங்கிரசுக்கு உதவுவர்.

சர்வாதிகாரக் கொள்கைகளையும், சர்க்காரின் சர்வாதீனத்தையும் ஆட்சேபிக்கும் எல்லா மக்களும், டாக்டர் மதியாசின் வேட்பை ஆதரிப்பார்கள் எனவும் நம்புகிறேன்."

குழுக் கூட்டம்

"சிவகாசி நகர தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம் 8—12—68 காலை 10-மணிக்கு மகாலிங்கம் திரைப்பட அரங்கில் வட்டச் செயலாளர் தலைமையிலும்--மாவட்டச் செயலாளரால் அனுப்பி வைக்கப்படும் ஆணையாளர் முன்னிலையிலும் நடைபெறும்" என்று சாத்தூர் வட்டச் செயலாளர் கோ. வரதராசன் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-19) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.